ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

மதுரகவியாழ்வார் அருளிச்செய்த

# கண்ணிநுண்சிறுத்தாம்பு

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

# கண்ணிநுண்சிறுத்தாம்பு

## தனியன்கள்

**அவிதி$_3$த விஷயாந்தர: ஶடா$_2$ரே:**
**உபநிஷதா$_3$ம் உபகா$_3$நமாத்ர போ$_4$க$_3$: |**
**அபி ச கு$_3$ணவஶாத் ததே$_3$கஶேஷீ**
**மது$_4$ரகவிர்ஹ்ரு’த$_3$யே மமாவிரஸ்து ||**

**வேறொன்றும் நான் அறியேன் வேதம் தமிழ் செய்த ⋆**
**மாறன் சடகோபன் வண் குருகூர் ஏரெங்கள் ⋆**
**வாழ்வாம் என்றேத்தும் ⋆**
**மதுரகவியார் எம்மை ஆள்வார் அவரே அரண்**

‡ கண்ணி நுண் சிறுத் தாம்பினால் ⋆
கட்டுண்ணப் பண்ணிய பெருமாயன் ⋆
என்னப்பனில் ⋆
நண்ணித் தென் குருகூர் ⋆
நம்பி என்றக்கால் ⋆
அண்ணிக்கும் அமுதூறும் ⋆
என்நாவுக்கே || **1** ||

நாவினால் நவிற்று ⋆
இன்பம் எய்தினேன் ⋆
மேவினேன் ⋆
அவன் பொன் அடி மெய்ம்மையே ⋆

தேவு மற்றறியேன் ⋆
குருகூர் நம்பி ⋆
பாவின் இன் இசை ⋆
பாடித் திரிவனே ‖ **2** ‖

திரி தந்தாகிலும் ⋆
தேவ பிரான் உடை ⋆
கரிய கோலத் ⋆
திரு உருக் காண்பன் நான் ⋆
பெரிய வண் குருகூர் ⋆
நகர் நம்பிக்காள் உரியனாய் ⋆
அடியேன் ⋆
பெற்ற நன்மையே ‖ **3** ‖

நன்மையால் மிக்க ⋆
நான்மறை ஆளர்கள் ⋆
புன்மை ஆகக் ⋆
கருதுவர் ஆதலின் ⋆
அன்னையாய் அத்தனாய் ⋆
என்னை ஆண்டிடும் தன்மையான் ⋆
சடகோபன் ⋆
என் நம்பியே ‖ **4** ‖

நம்பினேன் ⋆
பிறர் நன் பொருள் தன்னையும் ⋆
நம்பினேன் ⋆
மட வாரையும் முன் எலாம் ⋆
செம் பொன் மாடத் ⋆

திருக் குருகூர் நம்பிக்கன்பனாய் ⋆
அடியேன் ⋆
சதிர்த்தேன் இன்றே ॥ **5** ॥

இன்று தொட்டும் ⋆
எழுமையும் எம்பிரான் ⋆
நின்று தன் புகழ் ⋆
ஏத்த அருளினான் ⋆
குன்ற மாடத் ⋆
திருக் குருகூர் நம்பி ⋆
என்றும் என்னை ⋆
இகழ் விலன் காண்மினே ॥ **6** ॥

கண்டு கொண்டென்னைக் ⋆
காரி மாறப்பிரான் ⋆
பண்டை வல்வினை ⋆
பாற்றி அருளினான் ⋆
எண்டிசையும் ⋆
அறிய இயம்புகேன் ⋆
ஒண் தமிழ் ⋆
சடகோபன் அருளையே ॥ **7** ॥

அருள் கொண்டாடும் ⋆
அடியவர் இன்புற ⋆
அருளினான் ⋆
அவ்வருமறையின் பொருள் ⋆
அருள் கொண்டு ⋆
ஆயிரம் இன் தமிழ் பாடினான் ⋆

அருள் கண்டீர் ⋆
இவ்வுலகினில் மிக்கதே ॥ **8** ॥

மிக்க வேதியர் ⋆
வேதத்தின் உட்பொருள் ⋆
நிற்கப் பாடி ⋆
என் நெஞ்சுள் நிறுத்தினான் ⋆
தக்க சீர்ச் ⋆
சடகோபன் என் நம்பிக்கு ⋆
ஆட்புக்க காதல் ⋆
அடிமைப் பயனன்றே ॥ **9** ॥

‡ பயன் அன்றாகிலும் ⋆
பாங்கல்லர் ஆகிலும் ⋆
செயல் நன்றாகத் ⋆
திருத்திப் பணி கொள்வான் ⋆
குயில் நின்றார் பொழில் சூழ் ⋆
குருகூர் நம்பி ⋆
முயல்கின்றேன் ⋆
உந் தன் மொய் கழற்கன்பையே ॥ **10** ॥

‡ அன்பன் தன்னை ⋆
அடைந்தவர்கட்கெல்லாம் அன்பன் ⋆
தென் குருகூர் ⋆
நகர் நம்பிக்கு ⋆
அன்பனாய் ⋆
மதுரகவி சொன்ன சொல் நம்புவார் பதி ⋆
வைகுந்தம் காண்மினே ॥ **11** ॥

அடிவரவு — கண்ணி நாவினால் திரி நன்மையால் நம்பினேன் இன்று கண்டு அருள் மிக்க பயன் அன்பன் வாடினேன்

கண்ணிநுண்சிறுத்தாம்பு முற்றிற்று

மதுரகவியாழ்வார் திருவடிகளே சரணம்